**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-08-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-05 | 2023-08-06 | 2023-08-07 | 2023-08-08 | 2023-08-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 2.0 | 0.0 | 3.0 | 2.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 39.0 | 38.0 | 38.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 26.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 10 | 6 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 230 | 230 | 250 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 7 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

05.08.2023, 07.08.2023 மற்றும் 08.08.2023 தேதிகளில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 60% ஆகவும், பகல் நேரங்களில் 30% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37.0-39.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26.0-27.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6-10 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

09.08.2023 முதல் 15.08.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாக காணப்படும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழைக்கே வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு திட்டமிடலாம். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | முன்பருவ சம்பா பயிரிடும் விவசாயிகள் வயல்களை தயார் செய்யுமாறு அறிவுறுதப்படுகிறது. கடலூர் மாவட்டத்திற்கு சம்பா பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 50, ஆடுதுறை 51, ஆடுதுறை 52, சிஆர் 1009, சிஆர் 1009 சப் 1 மற்றும் சொர்ணாசப் 1. |
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான்தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். தாக்கப்பட்டபயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்தமாதிரி" காட்சியளிக்கும். மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். இதைக் கட்டுப்படுத்த அதிகளவில் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு பைமெட்ரோசின் 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி/ஏக்கர் மேக்னட்/டீபால்) கலந்து தெளிக்க வேண்டும். 2. தற்போழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோயின் தாக்கம் அதிகமாக கணப்படுகிறது. இதன் அறிகுறிகள் இலைகளின் மேற்பரப்பில் வெள்ளை நிறக்கோடுகள் காணப்படும். நோயின் தீவரம் அதிகமாகும்போது கோடுகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்துவிடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 300 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| கரும்பு | கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் போக்க போயிங் நோய் தாக்குதல் கரும்பு பயிரில் அதிகளவில் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் வளரச்சி குன்றி, குருத்து காய்ந்து, இலைகள் மஞ்சள் நிறமாகவும் மற்றும் கரும்புகள் வலுகுன்றியும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும். 1. கரணைகளை கார்பன்டசிம் 50 % WP ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் 30 நிமிடங்கள் நனைத்தபின், இமிடாகுளோபிரிட் 70 % WS லிட்டருக்கு 1.5 மிலி என்ற அளவில் 5 நிமிடம் வரை நனைக்கவும். 2. வயல்களின் ஓரங்களில் எறும்பின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். 3. வரும் முன் காக்கும் முறையாக வயல் ஓரங்களில் மூன்று வரிசை வரை இமிடாகுளோபிரிட் 17.8 SL 3.0 மில்லி/10 லிட்டர் அல்லது குளோரன்ட்ரானிலிப்ரோல் 18.5 SC 4.0 மில்லி/ 10 லிட்டர் அல்லது குளோதையானிடின் 50% WDG 5.0 கிராம்/ 10 |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | லிட்டர் அல்லது ஸ்பைரோடெட்ராமெட் 150 OD 12.5 மில்லி/ 10 லிட்டர் அல்லது புளோனிகாமிட் 50 WG 3.0 கிராம்/ 10 லிட்டர் தெளிக்க வேண்டும். 4. குருத்து மாவுப்பூச்சி 10 சதம் பொருளாதார சேதநிலையைத் தாண்டும் பொழுது 20 நாட்களுக்கு ஒருமுறை மேலே குறிப்பிட்ட பூச்சிக்கொல்லிகளை சுழற்சி முறையில் ஒட்டும் திரவம் ஒரு மில்லி/லிட்டர் என்ற அளவில் சேர்த்து தெளிக்க வேண்டும். 5. போக்க போயிங் நோய்க்கு கார்பன்டசிம் 50% WP 2.0 கிராம்/ லிட்டர் அல்லது புரோபிகொனோசோல் 25% EC 2.0 மில்லி/ லிட்டர் என்ற அளவில் ஒட்டும் திரவம் 1.0 மில்லி/லிட்டர் என்ற அளவில் சேர்த்து இருபது நாளைக்கு ஒரு முறை வீதம் மூன்று முறை தெளிக்க வேண்டும். 6. பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு முன்பு சோகைகளை நீக்கி இருக்க வேண்டும். 7. இரண்டு முறைக்கு மேல் மறுதாம்பு விடுவதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டும். |
| மக்காச்சோளம் | 1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். 2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி/கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். 3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். 4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். 5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளூபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும். 6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 நாள் மற்றும் 60 நாள் தெளிக்க வேண்டும். |